பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
22 03 2025 **SATURDAY** 6 45 **AM**
வணக்கம்-மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- மாற்றுத்திறனாளிகளுக்கு அனைத்து துறைகளிலும் சமமான பங்களிப்பை உறுதிசெய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்துவதில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.
- மும்மொழிக் கொள்கை விவகாரத்தால் தமிழக மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படக்கூடாது என்று மத்திய திறன் மேமபாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறியுள்ளார்.
- தஞ்சாவூர் வழியாக திருச்சி மற்றும் சென்னைக்கு பகல் நேரத்தில் கூடுதலாக ரயில்களை இயக்க ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. **R.N. Singh** தெரிவித்துள்ளார்.
- ஸ்விட்சர்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை முன்னேறியுள்ளது.

>>>>>>><<<<<<<

மாற்றுத்திறனாளிகளுக்கு அனைத்து துறைகளிலும் சமமான பங்களிப்பை உறுதிசெய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

மாற்றுத்திறனாளிகளின் திறமைகள் மற்றும் சாதனைகளை கொண்டாடும் வகையில், மத்திய சமூகநீதி மற்றும் அதிகாரமளித்தல் துறை குடியரசுத்தலைவர் மாளிகையில் நேற்று ஏற்பாடு செய்திருந்த ஊதா திருவிழாவில் கலந்து கொண்டு பேசிய அவர், இரக்கம், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி மற்றும் நல்லிணக்கம் ஆகியவை இந்திய கலாச்சாரம் மற்றும் நாகரீகத்தின் மாண்புகளாக உள்ளதாக கூறினார்.

சமூகநீதியை நிலைநாட்டவும், தனிநபர்களின் கண்ணியத்தை பாதுகாக்கவும் அரசியல் சாசனத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சுகம்யா பாரத் திட்டத்தின் மூலம், மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரம் அளிக்க மத்திய அரசு எடுத்துள்ள முயற்சிகளையும் அவர் பாராட்டினார்.

முன்னதாக நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளின் கலை மற்றும் கலாச்சார நிகழ்ச்சிகளை குடியரசுத்தலைவர் பார்வையிட்டார்.

>>>>>>><<<<<<<

மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்துவதில் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் நேற்று கேள்வி நேரத்தின் போது இது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளித்த அவர், தற்போதுள்ள மாவட்ட மருத்துவமனைகளுடன் மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்த மத்திய அரசு நிதியுதவி செய்து வருவதாக கூறினார்.

மத்திய அரசு 60 விழுக்காடு தொகையையும், மாநில அரசு 40 விழுக்காடு தொகையையும் பகிர்ந்து கொண்டு மருத்துவக் கல்லூரிகளை ஏற்படுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த திட்டத்தின்கீழ், நாடுமுழுவதும் 157 அரசு மருத்துவக்கல்லூரிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றில் 131 கல்லூரிகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஒப்புதல் அளிக்கப்பட்ட 157 மருத்துவக் கல்லூரிகளில் தமிழகத்தில் திருப்பூர், நீலகிரி, ராமநாதபுரம், நாமக்கல், திண்டுக்கல், விருதுநகர், கிருஷ்ணகிரி, திருவள்ளூர், நாகப்பட்டினம், அரியலூர், கள்ளக்குறிச்சி மருத்துவக் கல்லூரிகளும் அடங்கும் என்று திரு. ஜெ.பி. நட்டா தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

மும்மொழிக் கொள்கை விவகாரத்தால் தமிழக மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்வது மாநில அரசின் கடமை என்று மத்திய திறன் மேமபாட்டுத்துறை இணையமைச்சர் திரு. ஜெயந்த் சௌத்ரி தெரிவித்துள்ளார்.

புவனேஷ்வரில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பள்ளிக் கல்வியிலேயே அதிகமான மொழிகளை கற்றுத்தர வேண்டும் என்று கூறினார்.

பல மொழிகளை கற்றுக் கொள்வதற்கு மாணவர்களை தேசிய கல்விக் கொள்கை ஊக்கப்படுத்துகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

பல மொழிகளை கற்றுக் கொள்வதால், மாணவர்கள் உள்நாட்டில் மட்டுமல்லாமல், வெளிநாடுகளிலும் வேலைவாய்ப்புகளை பெற முடியும் என்றும் திறமையாக செயல்பட முடியும் என்றும் திரு. ஜெயந்த் சௌத்ரி கூறினார்.

>>>>>>><<<<<<<

முல்லைப்பெரியாறு அணையில் மத்திய அரசால் நியமிக்கப்பட்ட புதிய கண்காணிப்புக் குழு இன்று ஆய்வு மேற்கொள்ளவுள்ளது.

இந்த ஆய்வுக் குழுவில் தமிழகம் மற்றும் கேரளாவைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட ஏழு பேர் இடம்பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(சவுண்ட் பைட் - ராஜ்குமார் 29 செகண்டஸ்)

>>>>>>><<<<<<<

தஞ்சாவூர் வழியாக திருச்சி மற்றும் சென்னைக்கு பகல் நேரத்தில் கூடுதலாக ரயில்களை இயக்க ஆலோசனை நடத்தப்பட்டு வருவதாக தெற்கு ரயில்வே பொதுமேலாளர் திரு. **R.N. Singh** தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மற்றும் கும்பகோணம் ரயில் நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகளை நேற்று ஆய்வு செய்த பின்னர் கும்பகோணத்தில் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

கோடைகாலத்தில் சிறப்பு ரயில்களை இயக்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும், விரைவில் அறிவிப்பு வெளியிடப்படும் என்றும் அவர் கூறினார்.

தஞ்சாவூர் - கும்பகோணம், மயிலாடுதுறை – விழுப்புரம் இடையே இரட்டை ரயில் பாதை அமைப்பதை விட, தற்போதைக்கு இப்பாதையில் கூடுதல் ரயில்களை இயக்குவதன் மூலம், பயணிகளின் தேவையை நிறைவேற்ற முடியும் என்று அவர் தெரிவித்தார்.

கும்பகோணத்தில் மகாமகம் நடைபெறவுள்ள நிலையில், 100 கோடி ரூபாய் செலவில் ரயில் நிலையம் புதுப்பிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இப்பணிகள் அனைத்தும் அடுத்த ஆண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடிவடையும் என்றும் திரு. ஆர்.என். சிங் தெரிவித்தார்.

>>>>>>><<<<<<<

இருவரிச் செய்திகள்

பனாமா நாட்டில், நேற்று சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிக்டர் அளவையில் 6 புள்ளி ஒன்றாக பதிவானது.

>>>>>>><<<<<<<

காஸாவிலிருந்து நேற்று இஸ்ரேலின் மையப்பகுதியை நோக்கி இரண்டு ராக்கெட்டுகள் வீசப்பட்டதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

ஹரியானாவின் பானிப்பட்டில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களால் ஜனநாயக ஜனதா கட்சியின் முக்கிய தலைவர் ரவீந்தர் மின்னா சுட்டுக்கொல்லப்பட்டார்.

>>>>>>><<<<<<<

புதுதில்லியில் நடைபெற்ற நீர்ப்பாசன வாரியத்தின் ஆண்டு விருது வழங்கும் விழாவில், ஒருங்கிணைந்த நீர்வள ஆதார மேலாண்மையில் சிறப்பாக செயலாற்றியதாக தமிழகத்திற்கு விருது வழங்கப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

நீலகிரி மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டுள்ள இ-பாஸ் நடைமுறையை திரும்பப்பெற வேண்டும் என்று அம்மாவட்ட வர்த்தகர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

>>>>>>><<<<<<<

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சியில் கள்ளச்சாராயம் விற்பனை செய்து மனம் திருந்தியவர்களுக்கு மறுவாழ்வு நிதியுதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு. பிரதாப் வழங்கினார்.

>>>>>>><<<<<<<

மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் சார்பில் சென்னை, நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியில் வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இளையோர் நாடாளுமன்றம், இன்று நடைபெறவுள்ளது

>>>>>>><<<<<<<

சென்னையில் நாளை ஐபிஎல் கிரிக்கெட் போட்டி நடைபெறவுள்ள நிலையில், சேப்பாக்கம் விளையாட்டரங்கம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

>>>>>>><<<<<<<

சென்னை சேத்துப்பட்டு பகுதியில் சட்டவிரோதமாக வலிநிவாரண மாத்திரைகளை வைத்திருந்ததாக இரண்டு பேர் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து 700 மாத்திரைகள் கைப்பற்றப்பட்டன.

>>>>>>><<<<<<<

விளையாட்டுச் செய்திகள்

ஸ்விட்சர்லாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்கு இந்தியாவின் **Treesa Jolly – Gayathri Gopichand** இணை முன்னேறியுள்ளது.

**Basel** நகரில் நேற்று நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் இந்த இணை 21-18, 21-14 என்ற செட்கணக்கில் ஹாங்காங்கின் **Yeung Nga Ting – Yeung Pui Lam** இணையை வென்றது.

இன்று நடைபெறவுள்ள அரையிறுதியாட்டத்தில் இந்திய இணை – சீன இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்தியாவின் சங்கர சுப்பிரமணியன், பிரான்ஸின் கிறிஸ்டோ பப்போவிடம் தோல்வியடைந்தார்.

மற்ற இந்திய வீரர்கள் அனைவரும் காலிறுதிக்கு முந்தைய சுற்றிலேயே தோல்வியடைந்து போட்டியிலிருந்து வெளியேறினர்.

>>>>>>><<<<<<<

புதுதில்லியில் நடைபெற்று வரும் கேலோ இந்தியா பாரா விளையாட்டுப் போட்டிகளில் நேற்று தடகளம், பேட்மிண்டன் போட்டிகள் கவனத்தை ஈர்த்தன.

நேற்று நடைபெற்ற தடகள போட்டியில், தமிழகத்தின் **Ramesh Shanguman** ஆடவர் 800 மீட்டர் மற்றும் 100 மீட்டர் ஓட்டத்தில் தங்கப்பதக்கங்களை வென்றார்.

குண்டு எறிதல் போட்டியில் ரவி ரங்கோலி தங்கப்பதக்கத்தையும், அபிஷேக் வெள்ளிப்பதக்கத்தையும், மனோஜ் சிங்கராஜா வெண்கலப்பதக்கத்தையும் வென்றனர்.

இதுவரை நடைபெற்றுள்ள போட்டிகளில் தமிழ்நாடு 9 தங்கப்பதக்கங்களுடன் முதலிடத்தில் நீடிக்கிறது.

ஹரியானா 7 பதக்கங்களுடனும், உத்தரபிரதேசம் 5 பதக்கங்களுடனும் முறையே இரண்டாவது மற்றும் மூன்றாவது இடத்தில் உள்ளன.

>>>>>>><<<<<<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டி இன்று தொடங்குகிறது.

கொல்கத்தாவில் இன்று மாலை மணி 7.30-க்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் நடப்பு சாம்பியன் கொல்கத்தா அணி – பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

இந்த ஆண்டு ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில், 10 அணிகள் பங்கேற்கின்றன.

ஒவ்வொரு அணியும் தலா 14 லீக் ஆட்டங்களில் விளையாடும் வகையில் போட்டி அட்டவணை அமைக்கப்பட்டுள்ளது.

லீக் போட்டியின் முடிவில் புள்ளி பட்டியலில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள், ப்ளேஆப் சுற்றுக்கு முன்னேறும்.

இந்நிலையில், கோவை, நெல்லை, திருச்சி, மதுரை உள்ளிட்ட நகரங்களில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஐபிஎல் கிரிக்கெட் போட்டிகளை பொதுமக்கள் பெரிய திரைகளில் காண தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

>>>>>>><<<<<<<

சென்னையில் நேற்று நிறைவடைந்த அகில இந்திய காவல்துறை துப்பாக்கிச் சுடும் போட்டியில் ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் கோப்பையை அஸ்ஸாம் ரைபில்ஸ் அணியும், இரண்டாவது இடத்தை எல்லைப் பாதுகாப்புப்படை அணியும், மூன்றாவது இடத்தை அஸ்ஸாம் மாநில காவல்துறை அணியும் கைப்பற்றின.

போட்டிகளில் வெற்றிபெற்ற அணிகளுக்கு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் கோப்பைகளையும், பரிசுகளையும் வழங்கி பாராட்டினார்.

>>>>>>><<<<<<<

தூத்துக்குடியில் நேற்று நிறைவடைந்த துறைமுகங்களுக்கு இடையேயான கபடி போட்டியில், சென்னை துறைமுகம் சாம்பியன் கோப்பையை வென்றது.

நேற்று நடைபெற்ற இறுதிப்போட்டியில் சென்னை அணி 47-41 என்ற புள்ளிக்கணக்கில் மும்பை துறைமுக அணியை வென்றது.

தூத்துக்குடி துறைமுகம் 3வது இடத்தையும், பார்தீப் துறைமுகம் 4-வது இடத்தையும் பிடித்தன.

>>>>>>><<<<<<<